


கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் சார்பாக, குழந்தைகள் பாதுகாப்பு குறித்த அரை நாள் பயிற்சி வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி தொடக்க கல்வி அலுவலர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ச. இளங்கோ அவர்கள் தலைமையில் நாகர்கோவில், எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (09.07.2016) நடைபெற்றது.

செ.வெ.எண். 431 **பத்திரிகை செய்தி** நாள்: 09/07/2016

குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் உருவாக்கப்பட்டு, இத்திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு செயல்பட்டு வருகிறது.

சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் செயல்படும் இவ்வலுவலகம் மூலம் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பயிற்சியானது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் உதவி தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு 09.07.2016 அன்று நாகர்கோவில் S.L.B. மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது. பயிற்சியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. S. இளங்கோ அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்கள். சமூகப்பாதுகாப்புத்துறை மண்டல துணை இயக்குநர் திரு. S. தனசேகர பாண்டியன் அவர்கள் மற்றும் பேராசிரியர் திரு. சிவகுமார் அவர்களும் பயிற்சியை வழங்கினார்கள். அரசு குழந்தைகள் இல்லக் கண்காணிப்பாளர் திருமதி. சகிலா பானு மற்றும் S.L.B. மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. C. விஜயன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். மேலும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. S. குமுதா அவர்கள் வரவேற்புரை மற்றும் பயிற்சி குறித்த அறிமுகவுரையாற்றினார்கள். பயிற்சியில் குழந்தைகள் நலக்குழுத்தலைவர் திரு. அப்துல் ஹக்கீம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. K. பேச்சியம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் பாதுகாப்பு அலுவலர் திருமதி. M. பியூலா பெல் ஜெனகா நன்றியுரையாற்றினார்கள். பயிற்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக பணியாளர்கள் செய்துள்ளனர்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்